ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கு.சின்னப்பபாரதி நாவல்களில் சிறுபாத்திரங்களின்படைப்பும்அவற்றின்உளவியலும்

பொபாலுசாமி.,
பதிவெண் : Ref.No. PU/R&D/AATAM 156/2018
முனைவர் பட்ட ஆய்வாளர்தமிழாய்வுத்துறை ,,
கந்தசாமிக்கண்டர் கல்லூரி, பெரியார் )
பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
பநாமக்கல் ,வேலூர். - (638182)தமிழ்நாடு ,,
இந்தியா.

முனைவர் பொ.வெங்கடேசன்,
ஆராய்ச்சி நெறியாளர் & உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறைகந்தசாமிக்கண்டர் கல்லூரி ,,
பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு )
பெற்றது) ப ,வேலூர்.நாமக்கல்-(638182),
தமிழ்நாடு.இந்தியா ,

ஆய்வுச்சுருக்கம்,

தற்காலவாழ்வைப் பேசக்கூடியவைகளே தற்கால இலக்கியங்கள் ஆகும், மேலைநாடுகளில் தோன்றியதைப் போல் நில பிரபுத்துவத்திற்கு எதிரான மத்திய வர்க்கத்தின் குரலாக அது இந்தியாவில் ஒலிக்கவில்லை, அதனூடேநிலவுடைமைச் சமூகங்களுக்கு இடையேயான சாதியம்தொழிலாளர் வர்க்கச் சுரண்டல் ,பெண்ணடிமை ,, அறியாமை, கல்வி, தத்துவம்மெய்யியல் போன்ற பலக்கூறுகளை உள்ளடக்கிய சமுதாய வரலாற்று ஆவண,மாகத் தோன்றி விளங்கி வருகின்றன. அவற்றுள்புனைகதைகள் என்பவைதமிழில் கதைகூறும் நெடு மரபின் தொடர்ச்சியாக காலனியக்கால ஆட்சி, அக்காலக் கல்வி போன்ற தாக்கம் பெற்றவர்களால், உள்ள நிலைமைகளைப் போக்கவும், தாம் பெற்ற புதுச் சிந்தனைகளைப் புகுத்தவும் கைக்கொண்ட கலை வகைமைகளுள் ஒன்று.

பொதுவில் இருக்கும் அனுபவத்தை தனது அனுபவமாக எடுத்துக்கொண்டு, தனது கலைத்திறனிற்கேற்ப புனைவதே புனை விலக்கியம் ஆகும்ஒரு சம்பவத்தைக். குறித்தான பார்வை ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாக இருக்கும், இங்கு ஒவ்வொரு தனியனுக்கும் ஒவ்வொரு தனித்தனிமனோ நிலை, படைப்பாளன் என்போன் இவற்றுள் மேம்பட்டதைச் சிந்தித்து அதைக் கலையாக்குபவனாக இருக்கின்றான். அம்மேம்பட்டமனம் படைப்பவை இவ்வுலகப் போதாமைகளிலிருந்து மேலான ஒன்றை வலியுருத்துவதாக, முரண்களை களைத்துப் போட்டு விளையாடுவதாக இருக்கின்றன. அந்தகலை அனுபவத்தை வாசகனும் உணர்கிறான், சில நேரங்களில் போகிற போக்கில் செய்தவைக் கூட கலையின் மகோன்னதம் என வாசகன் கொண்டாடுகிறான். இங்கு அவ்வாறான கலையின் உரிமையை படைப்பாளிக்கா, வாசகனுக்கா என்ற கேள்வியைக் காட்டிலும்படைத்தல்அதை , உணர்தல் இரண்டிற்கும் இடையேஅனுபவம் என்ற புள்ளியில் இருவரும் இணைகின்றனர்.அனுபவம் சமுதாயத்தில்இருப்பது. படைப்பும் சமுதாயத்திலிருந்தே உருவாகிறது. சமுதாயத்தில் உலவும் மனிதர்களின்இயல்புகளும், செயல்களுமே பாத்திரங்களாக புனையப்படுகின்றன. அப்பாத்திரங்கள் நம் கண்முன் உலவும் நாம் உள்ளிட்ட சக மனிதர்கள்தான். அவ்வாறான பாத்திரங்களுள்கு. சின்னப்பபாரதியின் நாவல்களில் வரும்துணைப் பாத்திரங்களில் வெளிப்படும் உளவியலைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைச்சொற்கள்

நனவு மனம். பய உணர்வு. உள்ளுணர்வுகட்டாயத்தன்மை.. மேலெழும்புதல்பண்படா உள்ளம்.. சுரண்டல்.

முன்னுரை

படைப்பாளன்பாத்திரத்தை உருவாக்கும்போது அப்பாத்திரத்திற்கு பெயர் வைத்தலோடு முடித்துக்கொள்வதில்லை. பாத்திரத்தின் செயல்களை விவரிக்கிறார், அதன் மூலம்அது வெளிப்படுத்தும்மெய்ப்பாடுகளை, உணர்வுகளை கூறுகிறார், அவற்றின் உள் மெய்யாக அவர் கூற வருவது அப்பாத்திரத்தின் உளச் செயல்பாடுகளைத்தான்.இதற்காக அப்படைப்பாளன்மனவியல் மருத்துவனைப்போல்பாத்திரங்களின் மனதுக்குள் பயணிக்கிறார். அவற்றின் மனஅடுக்குகளைபுரிந்துகொள்ள முயல்கிறார். அவர் உணர்ந்ததையே அப்பாத்திரங்கள்வெளிப்படுத்தும் உணர்வுகளாகவும், செயல்களாகவும் சமைக்கிறார்.ஒரு படைப்பை நினைக்கையில் அப்படைப்பிலுள்ள பாத்திரங்கள்நிகழ்த்தும் நிகழ்வுகளே நம் கண்முன் விரிகின்றனஅச்செயல்கள்நம்மைச் சுற்றி நிகழ்ந்தவை அல்லது ஏன் இவ்வாறு . நிகழ்ந்திருக்கக் கூடாது என மனம் விழைந்தவையாகஇருப்பதால்தான்பாத்திரங்களின் நிகழ்வுகள் நம்மனக்கண்ணில் தோன்றுகின்றன. ஆக மனிதர்களைப் போலவே பாத்திரங்களும் மன உந்துதல்களால் இயங்குபவையாக இருக்கின்றன. நாவல் இலக்கியத்தைப் பொருத்தவரைபிரதிஎன்பது அதில் வரும் மொத்தப் பாத்திரங்களின் உரு எனலாம்.நாவலின்மொத்தப் பாத்திரங்களும் நாவல் முழுக்க வரவேண்டும் என்பதில்லை. பிரதியின் தேவைக் கருதிஅவற்றுள்சிலபாத்திரங்கள் நாவல் முழுவதும்வரும்அவை முதன்மை , பாத்திரங்கள். சில சிறு பகுதிகளில் சிற்சில சம்பவங்களைநிகழ்த்துபவையாகவும்வரலாம்,அவை துணைப் பாத்திரங்கள் எனப்படுகின்றன.துணைப் பாத்திரங்கள்கதையின் கருவைச்சுமந்து செல்லும் கதைப்போக்கிற்கு முதன்மையான ஒன்று. நாம் என்பது தாய்,தந்தை,மனைவி,குழந்தை,அண்டை வீட்டார்,பொதுவெளியில் இருப்போர் என எல்லோரும் கலந்த கலவை. அதுபோலவேநாவலின் கதைப் பின்னலையும்எல்லா பாத்திரங்களும் சேர்ந்து கட்டமைக்கின்றன. எனவேநாவல்களில்‘உளப்பகுப்பாய்வியல்’ அணுகுமுறை என்பது இன்றியமையா ஒன்றாகிறது. இவ்வணுகுமுறையைக்கொண்டுகுசின்னப்பபாரதியின் . நாவல்களில் வரும் முக்கிய துணைப் பாத்திரங்களின்வழிஅவைவெளிப்படுத்தும்உளவியலைபின்வருமாறு காணலாம்.

நாவல்களும்,பாத்திரங்களும்

எல்லா நாவல்களிலும் பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. நாவல் என்ற வகைமைபாத்திரங்கள் நிகழ்த்தும் சம்பவங்களை விளக்குவதாக இருக்கின்றன. பாத்திரங்கள் நிகழ்த்தும் சம்பவங்களைமட்டும் கூறிநாவலை உருவாக்க முடியும். ஆனால் பாத்திரங்கள் இல்லாத நாவல் என்ற ஒன்று இல்லை. சங்க இலக்கியம் முதலான(சிலசெவியறிஉரூஉவகைஇலக்கியங்கள்தவிர)இலக்கியங்கள்கருத்தை முதன்மையாகக் கொண்டசொற்கட்டமைப்பின்முழுமையான வடிவங்கள் ஆகும், கருத்தினை விளக்கும் பெரும் பணியை அதில் வரும் பாத்திரங்களே நிகழ்த்துகின்றன.நாவல்களிலும் பிரதி கொண்டிருக்கும் கருத்தினை விவரிக்கும் முதன்மை கூறாகபாத்திரமே விளங்குகின்றது.பாத்திரங்களைரத்தமும் சதையும் கொண்ட உடலாகவும், நகை, அழுகைமுதலானஅத்தனை மெய்ப்பாடுகளைவெளிப்படுத்தும் உருவாகவும்பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் , மனமாகவும் படைக்கப்படுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் இம்மண்ணில் உலவும்மனிதர்களை போலச் செய்கிறார்கள்.

> "என்னுடைய கதையில் தோன்றும் பாத்திரங்கள் மேல் நான் ஆட்சி செலுத்துவதில்லை. அதற்குப் பதிலாக அப்பாத்திரங்களே என்னைச் செலுத்துகின்றன. அப்பாத்திரங்களின் உரையாடலில் கூட நான் பங்கு கொள்வதில்லை. பல சந்தர்ப்பங்களில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த பின்னரும் ஓர் உரையாடல் நிகழ்ந்த முறையை கண்டு இறும்பூது எய்துவதுண்டு."
> (அ.ச.ஞானசம்பந்தன் - இலக்கிய கலை, பக்-317)

என்றஅ.சஞானசம்பந்தத்தின் கூற்றானது, பாத்திரங்கள்அனைத்தும் படைப்பாளியே அல்ல, படைப்பாளி தன் வாழ்வில் பார்த்த மனிதர்களேஅவர் படைப்பில் வரும் பாத்திரங்கள். பாத்திரங்களின் உரையாடலில் கூட படைப்பாளி தலையிடுவதில்லை ஏனென்றால், படைப்பாளி வேறானவர், தான் பார்த்த மனிதர்கள் ஒவ்வொருவரும் வேறுவேறானவர்கள்என்ற உண்மையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

*"மண்ணின் தெருப்புழுதியில்அலைந்து திரியும் என் உணர்ச்சிகள்என்னிலும் உயர்ந்து விண்ணை நோக்கிப்பறந்தவேளையில் என்னிடமிருந்து பிறந்தவர்கள் அவர்கள்." (அகிலன்.கதைக்கலை, பக்-111)*

என்ற அகிலனின் வரிகளானதுபடைப்பு என்பதே இம்மண்ணிலிருந்து நாம் பார்த்தவற்றைபோலச் செய்தல் என்பதையும்அதில் வரும் பாத்திரங்கள்நாம் கண்ட மனிதர்களே , என்பதைஉணர்த்துகிறது.

*"இலக்கியம் குறித்த மிக நுட்பமான சொல்லாடலை வளர்த்தெடுப்பதற்கு பெரிதும்துணைநின்றஒரு துறை உளப்பகுப்பாய்வுத்துறையாகும்." (க.பஞ்சாங்கம். இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் பக் - 128)*

என்ற கபஞ்சாங்கத்தின் கூற்றுப்படிஇக்கியங்களின் நுட்பங்களைவிளங்கிக் . கொள்ளஉளப்பகுப்பாய்வு அணுகுமுறை நமக்குஉதவும்.

மாரப்பன் (தாகம்(

தாகம் நாவலில் வரும் துணைப் பாத்திரம் மாரப்பன், ஏழை விவசாயி, முதன்மைப் பாத்திரமான கந்தனின் தந்தை, உடலில் தெம்பு இருக்கும் மட்டும் உழைப்போம், பிறகுதம்பிள்ளைகள் நம்மை பார்த்துக்கொள்ளும் என்ற சராசரி மனம் கொண்டவர். தனக்கிருந்த நிலத்தினைப் பண்ணையாருக்கு விற்றுவிட்டுஅவரது பண்ணையில்வேலைக்கு வரும் அடிமை மக்களிடம் வேலை வாங்கும் கண்காணிப்பாளர்வேலை இவருடையது.மக்களிடம் என்னதான் அன்பாக நடந்து கொண்டாலும், அம்மக்கள் பண்ணையாரை எதிர்க்கையிலும்தன்மகன் கந்தன் , தாழ்ந்த சாதிப் பெண்ணை திருமணம் செய்த போதும்அவருள்இருந்தசாதிய மனோபாவம் வெளிப்படுவதை காணலாம்.

*"தன்னைமறந்தநிலையில்டேய்! நாதாரி பெத்த மவனெ எங்கையாலெநீ சாகப்போற"(கு.சின்னப்பபாரதி. தாகம். பக்-266)*

மனிதனின் வளர்ச்சி என்பது உடலும் உள்ளமும் சேர்ந்து வளர்வதே.இவர் வயதின் முதிர்வு அவரது மனதில் ஒரு பண்பை வளர்க்கிறது. அது கஷ்டப்படும் தொழிலாளர்களிடம் தண்மையுடன் நடந்துகொள்ள வைக்கிறதுஅதேசமயம்அவர்கள் தான் ஒத்த சாதி சார்ந்ததனது . முதலாளியைஎதிர்க்கும் போதுநனவிலி மனதில் தேங்கியிருக்கும் நான் யார் என்ற கேள்விக்கான பழக்கப்படுத்தப்பட்ட விடைமேலெழுந்துவந்துஅவர்களை இழிவெனக் கருதிநசுக்கிடும் மனப்போக்கினை அடைகிறதுஇது அரைகுறை பண்பட்ட மனம் என்று கொள்ளலாம்.

திருமன்(சங்கம்(சங்கம்) வெள்ளையன்(

சங்கத்தில் வரும் சிறுபாத்திரம்திருமன், இது ஒரு அறியாமை பாத்திரமாகபடைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துஅருகிய கொல்லிமலையில்வாழ்பவர். வெளி உலக அனுபவம் வாய்க்கப்பெறாரவர்.அதனால் அதிகாரிகளும்காவலர்களும் ஏய்ப்பதை , இயல்பென கருதுபவர். அவர் புலனனுபவத்தின்படிஅவரின் சுற்றத்தாரும் அவ்வாறே என்பதை உணர்த்துகிறது.

*"அவன் உள்மனம் ஓஎன்றுஅழுகிறது. அவனுக்குகைகொடுக்க யாருமில்லை. அவனுக்குதெரிந்தவர்கள்பழக்கப்பட்டவர்கள்எல்லாம் அவனைப்போன்றேவிதியைச்சுமந்துகொண்டிருப்பவர்கள்தான்."(கு. சின்னப்பபாரதி, சங்கம். பக்.36)*

என்ற நாவலில் வரும் பகுதி இவர் மனம் எவ்வளவு பண்படாத நிலையில் அல்லது முதிர்ச்சி அடையாத நிலையில் இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

*"பண்படா உள்ள உந்தல்கள்தன்முனைப்பு நிலையில்குற்ற உணர்வு, தண்டனை விரும்புதல், பதற்றப்படுதல் போன்ற உள நிலைகளை சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது" (வாழ்வியற்களஞ்சியம். தொகுதி - 2. பக். 306)*

என்ற உளவியல் கருத்தின் படிஇவர்உள்ளத்தின்தன்மையைநாம் உணரலாம். அறியாமை நிலை ஏற்படுத்தும் மனத்தின்தாக்கத்திற்கு இப்பாத்திரமே சான்று. இவரைப் போலவே வெள்ளைச்சாமியின் பாத்திரமும் படைக்கப்பட்டிருப்பதை

*"வெள்ளையன் ஒரு திக்கற்ற குழந்தை போல் தேம்பி தேம்பி அழுதான்." (கு.சின்னப்பபாரதி. சங்கம் பக்- 157)*

என்ற கூற்றின் வழி உணரலாம்.

சுகுமார்பவுரி (சுரங்கம்)

கு சின்னப்பபாரதியின்.நாவல்களில்சுரண்டலுக்குஉள்ளாகும் தொழிலாளர் வர்க்கத்துள்தன்னிலையாவே

> "நான் என் வேலையிலெகொறை வைக்கலிங்களே! பசிக்களைப்பு. முடியாமே தலைசாஞ்சிட்டே. கம்பெனிக்கு நட்டம் ஏற்படுத்தியிருந்தாநீங்க கொடுக்கறதண்டைனையேஏத்துக்கிறேன் (கு. சின்னப்பபாரதி. சுரங்கம். பக்- 134 - 135).

என்றவாறுஎதிர்ப்புக்குரலைப்பதிவு செய்தவர் இவரே. மனிதன் பொதுவாகவே உள்ளுணர்வினால் இயங்குபவன். உள்ளுணர்வுகள்அவன் உடன்பிறந்தவைகள். அவை கட்டாயத்தனப் பண்பு கொண்டவைகூடவே குறித்த ஊக்கப்பாடுகளையும் . கொண்டிருக்கும்அதன் வெளிப்பாடே சுகுமார் பவுரியின் எதிர்ப்புக்குரல்

சம்பந்தன்(தாகம்)சீரங்கன்(சங்கம்)

இவ்விரண்டு பாத்திரங்களும் முற்போக்கு சிந்தனை கொண்டதாக படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அறியாமைக்கு நேர் எதிரான மனங்களைக் கொண்டவர்கள். இவர்களின்வேட்கை மனம் அறியாமையில் இருந்து அகல வழிவகுக்கிறது. பின்னர் தாம் கற்றதைபிறருக்கு எடுத்துக்கூறிஆற்றுப்படுத்தும்நிலைக்குச் செல்கின்றனமனப்போக்கைஅடைகின்றனர்.

> "உங்கள் பலரின் துயரில்தான் சிலர் சுகிக்கிறார்கள்.இனி நாங்கள்துயர்பட மாட்டோம்என்றுஉழைப்பவர்கள் ஒன்றாக எழுந்துவிட்டால்உங்கள் துயரத்துக்கு முடிவு காலம் ஏற்பட்டு."(கு.சின்னப்பபாரதி. தாகம். பக் -321)

என்ற தாகம் நாவலில்வரும் சம்பந்தனும்

> "ஒரு சரியான அரசியல் அடிப்படையில் வரும்பொழுதுதான்- அதை யதார்த்தத்தில் அவர்கள் பார்த்து தெரியும்பொழுதுதான்- அவர்கள் ஒன்றுபடக் கூடிய சாத்தியம் ஏற்படும். அதைத்தான் முதலில் நாம் செய்யனும்." (கு.சின்னப்பபாரதி. சங்கம். பக்- 192)

என்றசங்கம் நாவலில் வரும் சீரங்கனும், இருவேறுபட்ட சூழலில் தோன்றியவர்கள்முன்னவர்இடசாரிய சிந்தனாவட்டப்பின்புலத்தில் தோன்றியவர், பின்னவர்அறியாமைச் சூழலிருந்துதோன்றி, சம்பந்தம்போன்ற வேலுச்சாமியால் (சங்கம்) உருவாக்கப்பட்டவர். இருவருக்குள்ளும்நனவு நிலையில்தான்என்ற எண்ணம் மேலெழும்பிவந்துள்ளதுஅதன்பிறகுஅவர்களுடைய ஆளுமைப் பண்புவெளிப்படத் . தொடங்கிற்று. இருவருக்கும் காலமே வித்யாசப்படுகிறது எனக் கொள்ளலாம்.

சுரண்டல்மற்றும் சுயநலப் பாத்திரங்கள்

நாச்சியப்பக்கவுண்டர் (சர்க்கரை),திவாரி(சுரங்கம்(, போன்ற சுரண்டல் பாத்திரங்களும், சேனாபதி கவுண்டர் (தாகம்), சிங்கக் கவுண்டர் சர்கரை)) போன்ற சுயநல பாத்திரங்களும் குபொதுவாக சுயநலம் என்பது .சின்னப்பபாரதியின் நாவல்களில் வருகின்றனர். பயம் கட்டுப்பாட்டை கோருகிறது.தன்மீதானபயஉணர்வின் நடத்தையாகும். அக்கட்டுப்பாடு பிறரை அவர் நிலையில் பார்க்காமல் யாவற்றையும் தன்நிலையிலிருந்தேபார்ப்பதால்சுயம் சார்ந்தஎண்ணங்கள்உயர்ந்து மற்றவர்களுக்கு ஏதொரு நன்மைக்கும் இடம்தராமல்போய்விடுகிறது.Nசுரண்டல் என்பதுமிருக மனோநிலை ஆகும். வேட்டைவிலங்குள்மற்ற விலங்குகளைவேட்டையாடுவதைப்போல்இவர்கள் மற்ற மனிதர்களின்இரத்தங்களை சுரண்டல் வழி உறிஞ்சிக்குடிக்கின்றனர். இருதரப்பின் மனமும் பண்படாத மற்றும் வளர்ச்சியடையாத மனங்களே.

> "நாம்விலங்கு உணர்சிகளால் தீர்மானிக்கப்படுகிறோம்" (தி.கு.இரவிச்சந்திரன். பிராய்ட், யுங், லக்கான் அறிமுகமும் நேர்முகமும் பக்.27)

என்றபிராய்டின் கூற்றிற்குப்பொருந்தும் பாத்திரங்களே மேற்கூறியவைகள்ஆகும்.

முடிவுரை

இலக்கியங்களைஉளப்பகுப்பாய்வு திறனாய்வுக்குஉட்படுத்தும் போது இலக்கியம் குறித்த மிக நுட்பமான சொல்லாடலை வளர்த்தெடுக்கலாம், மனித மனதின் செயல் கூறுகளை இதன் வழியே மிக விரிவாக நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது, மனம் குறித்த பல்வேறு கருத்தாக்கங்களை பாத்திரங்களின்வழியே பொருத்திப் பார்க்கும் பொழுது பற்பல கருத்தாக்கங்களை நம்மால் காண முடிகிறது.

துணை நூற் பட்டியல்

*1.அஞானசம்பந்தன்.ச.- இலக்கிய கலை,பாரி நிலையம்,*
*90. பிராட்வே, சென்னை - 600 108. முதறப்பதிப்பு - 1999*
*2அகிலன்.கதைக்கலை. பாரி புத்தகப் பண்ணை,சென்னை .05*
*இ.பதிப்பு. 1976*
*3.கதிறனாய்வுக்அன்னம் வெளியீடு ,பஞ்சாங்கம்இலக்கியமும்.*
*நிர்மலா நகர்,தஞ்சாவூர்- 613007இ .பதிப்பு. 2016*
*4.நாதெ) பாலுச்சாமி..ஆ,)வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி .2,*
*தஞ்சைப்பல்கலைக்கழகம்தஞ்சாவூர்.. முதறப்பதிப்பு – 2009*
*5.குசின்னப்பபாரதி.. சங்கம் செல்மா. 2, சிவன் கோயில்த் தெரு,*
*சிவகங்கை - 623560. இ. பதிப்பு – 1995*
*6.குசின்னப்பபாரதி.. தாகம். பாவை பப்ளிகேஷன்ஸ். 142,*
*ஜானி கான்சாலைஇராணிப்பேட்டைசென்னை , – 600014*
*முதறப்பதிப்பு – 2001*
*7.குசின்னப்பபாரதி..சர்க்கரை. அன்னம் லிட் (பி) 2,சிவன் கோயில்த்*
*தெரு. சிவகங்கை - 623560. இ. பதிப்பு – 1995*
*8.குசின்னப்பபாரதி..சுரங்கம். பாரதி புத்தகாலயம், 421 ,*
*அண்ணாசாலை. சென்னை - 600018முதறப்பதிப்பு ,. 2006*
*9.திபிராய்ட் .இரவிச்சந்திரன்.கு., யூங் லக்கான் அறிமுகமும் ,*
*நேர்முகமும்.அடையாளம் பதிப்பகம், புத்த நத்தம். சென்னை621310*
*முதறப்பதிப்பு - 2007*

********* ********* ********** ********* ********* ********** ********** **********